13 Edition
Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
JITF 2023
MARCH மார்ச் 3 4 5
9.00மு.ப - 7.00பி.ப
Muttraweli Grounds
இன்னும் 1 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 96

வியாழக்கிழமை 02 மார்ச் 2023 | மாசி 18 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12

## யாழ். மாநகரசபைக்கு 10இல் மேயர் தெரிவு!

### விரைவில் வர்த்தமானி வரும்

யாழ்ப்பாணம், மார்ச் 2
யாழ்ப்பாணம் மாநகரசபையின் புதிய மேயர் தெரிவு எதிர்வரும் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என்றும் இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு விரைவில் வெளிவரும் என்றும் தெரியவருகின்றது.
யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் முதல்வர் ஆர்னோல்ட் முன்வைத்த பாதீடு நேற்றுமுன்தினம் தோற்கடிக்கப்பட் »11

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி யாழில் நாளை ஆரம்பம்!

### மாணவர்களுக்கு அனுமதி இலவசம்

யாழ்ப்பாணம், மார்ச் 2
வடக்கின் நுழைவாயில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நாளை 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையான மூன்று தினங்கள் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறவுள்ளது.
'யாழில் வடக்கின் நுழை »11

## நீரில் மூழ்கி ஒருவர் பலி!

யாழ்., மார்ச் 2
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலிப் பகுதியில் உள்ள தாமரைக் குளத்தில் மூழ்கி மரியான் பீரிஸ் (வயது-52) என்ற குடும்பத் தலைவர் நேற்று உயிரிழந்தார்.
குறித்த குளத்தில் நீராடச் சென்ற வேளையிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்ப »11

# தேர்தல் தொடர்பில் இருநாள் விவாதம்

### மார்ச் 9, 10ஆம் திகதிகளில் நாடாளுமன்றம் களேபரமாகும்

கொழும்பு, மார்ச் 2
உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு உட்பட அந்தத் தேர்தல் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. »11

ஈஸ்டர் தாக்குதல் வழக்கு

## மைத்திரியின் மனு நிராகரிப்பு ஜனாதிபதி ரணில் விடுவிப்பு!

கொழும்பு, மார்ச் 2
உயிர்த்தஞாயிறுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட 108 பேர் தாக்கல் செய்த வழக்குகளில் பிரதிவாதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அந்த வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். இதேவேளை - இந்த வழக்கிலிருந்து தன்னை விடுவிக்கவேண்டும் என்று மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்திருந்த மேன்முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. »10

முச்சந்தி முரளி



"அரசியல் தலையீடு இல்லாத ஆணைக்குழுவை அமைச்சால் அது உலகமகா அதிசயமெல்லோ"

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது!

யாழ்., மார்ச் 2
கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயற்றாலைப் பகுதியில் »10

## உண்மை, நல்லிணக்க ஆணைக்குழுவில் அரசியல் தலையீடுகள் இருக்கக்கூடாது!

### ஜனாதிபதிக்குப் பரிந்துரைத்தது ம.உ.ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 2
நாடாளுமன்ற அதிகாரத்தின் கீழ் உருவாக்கப்படும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவானது உண்மையைக் கண்டறிவதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், நீதி மற்றும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் ஏதுவான வகை »11

## விபத்தில் இளைஞர் இறப்பு!

யாழ்., மார்ச் 2
விபத்தில் காயமடைந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். இரத்தினேஸ்வரன் பவிதன் (வயது -23) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார். »11

இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட

## முன்னாள் போராளி கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, மார்ச் 2
இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட முன்னாள் போராளி ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். »10

## உள்ளூராட்சித் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்!

### அமெரிக்க செனட் உறுப்பினர் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 2
இலங்கையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு, அமெரிக்க செனட் சபையின் வெளிவிவகாரக் குழுவின் உறுப்பினர் மெனண்டஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.
இலங்கை மக்களின் குரலைப் பறிக்கும் எந்தவொரு முயற்சியும் மறுக்க முடியாத ஜனநாயக விரோத »10

## இ.போ.ச. பேருந்தில் கஞ்சா கடத்தல்!

### பூநகரி பொலிஸாரால் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 2
இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தில் வைத்து நூதனமான »10

## 50 ரூபாவால் குறைந்தது மண்ணெண்ணெய் விலை!

கொழும்பு, மார்ச் 2
மண்ணெண்ணெயின் விலையை 50 ரூபாவால் குறைப்பதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி நேற்று நள்ளிரவு முதல் ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் புதிய விலை 305 ரூபாவாக [illegible] »11

## தேர்தல்கள் ஆணைக்குழுவில் மீண்டும் மஹிந்த தேசப்பிரிய?

கொழும்பு, மார்ச் 2
தேர்தல்கள் ஆணைக்குழுவின் அங்கத்தவர் பதவி வெற்றிடமாகவுள்ள நிலையில், அந்தப் பதவிக்கு விண்ணப்பித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பி. க்களின் சொத்து மதிப்புக்கள் தகவலறியும் சட்டத்தினூடு கோரலாம்

## மேன்முறையீட்டு நீதிமன்றம் அதிரடி

கொழும்பு, மார்ச் 2

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் விதிகள் நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் பொருந்தும். அதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களில் உள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளமுடியும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சம்பத் அபயகோன் மற்றும் பி. குமாரரட்ணம் ஆகிய இருவர் அடங்கிய அமர்வு நேற்றுமுன்தினம் இந்தத் தீர்ப்பை வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றஉறுப்பினர்கள் பொது மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர்கள். அவர்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாட்டின் சட்டங்களுக்கு கட்டுபட்டவர்களாவர். அந்த வகையில் எந்த ஒருவரும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சட்டத்தின் விதிகளின் கீழ், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுடன் தொடர்புடைய அறிவிப்பை வெளியிடக் கூடியவரே. அந்தவகையில் தகவல்களை வழங்கத் தவறினால் அவர்களுக்கு அபராதம் அல்லது சிறைத்தண்டனை விதிக்கப்படும் என நீதியரசர் அபயகோன் தீர்ப்பிட்டுள்ளார்.

ஊடவியலாளர் ஒருவர் கோரிய தகவல்களை வெளியிட நாடாளுமன்ற செயலாளர் நாயகம் நிராகரித்த நிலையில் ஊடகவியலாளரால் தகவல் அறியும் சட்டத்தின் 32வது பிரிவின்படி தகவல் அறியும் ஆணைக்குழுவில் மேல்முறையீடு செய்யப்பட்டது. ஆணைக்குழு, தகவல்களை வழங்குமாறு பணித்த போதும் அதற்கு எதிராக நாடாளுமன்றத்தின் குறித்தளிக்கப்பட்ட அலுவலரால் தொடுக்கப்பட்ட வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

# ஜனாதிபதியின் தயவிலேயே தொழிற்சங்கப் போராட்டம்!

## ஐ.தே.க. தவிசாளர் தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 2

போராட்டங்களை நடத்துவதற்காகத் தொழிற்சங்கத் தலைவர்கள் பயணங்களை மேற்கொள்ளத் தேவையான எரிபொருளைப் பெற ஜனாதிபதியே வழிவகுத்தார் என்பதை அவர்கள் நினைவிற்கொள்ள வேண்டும் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் நிலவிவந்த வரிசையுகத்தை ஜனாதிபதி இல்லாதொழித்து போக்குவரத்தை இலகுவாக்கியமையாலேயே போராட்டங்களை நடத்துவதற்காக தொழிற்சங்கத் தலைவர்கள் பயணிக்க முடிகிறது. எரிபொருள்வரிசை, எரிவாயுவரிசை போன்றே உர வகைகள் இன்றி விவசாயிகள் அவதியுற்ற சிக்கலான காலத்தில் அத்தகைய பிரச்சினைகளை-சவால்களை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார். தற்போது நாட்டில் நிலவி வந்த வரிசைகள் இல்லாதொழிக்கப்பட்டுள்ளன.

நாடு ஓரளவு வழமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் தொழிற்சங்கப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இத்தகைய போராட்டங்கள் நடத்துவது சுற்றுலாப் பயணிகளை பாதிக்கும். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுறச் செய்யும். ஜனாதிபதியின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்பவர்கள் அரசாங்கத்தின் சிறந்த திட்டங்களினூடாகவே போராட்டங்களையும் நடத்த முடிகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் - என்றார். (ச-இ)

# புதுப்பிக்கத்தக்க சக்தி இயங்கும் பேருந்துகள் இலங்கையில் அறிமுகம்

கொழும்பு, மார்ச் 2

வெளிநாட்டில் இருந்து எரிபொருள்களை இறக்குமதி செய்வதற்கான செலவைக் குறைக்கும் வகையில், புதுப்பிக்கத்தக்க சக்திமூலம் இயங்கக்கூடிய பேருந்துகளை அறிமுகப்படுத்த போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்,

அரச தனியார் கூட்டுத்திட்டமாக புதிய பேருந்துகளை நடைமுறைப்படுத்துவதற்கான யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நகரமான கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தை மையமாகக் கொண்டு, இலங்கைப் போக்குவரத்துச்சபையால் மின்சார பேருந்துகள் இயக்கப்படவுள்ளன. அதன்படி, முறையான சாத்தியக்கூறு ஆய்வின் அடிப்படையில் ஒரு பரீட்சார்த்தத் திட்டத்தை செயற்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது - என்றார். (ஒ-14,இ)

# ஒய்வூதியத்துக்கு புதிதாக நிதியம்!

## ரணில் யோசனை

கொழும்பு, மார்ச் 2

அரச ஊழியர்களில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு அவர்கள் இளைப்பாறிய காலத்தில் அனுகூலங்களுடன் கூடிய ஓய்வூதியத்தை வழங்குவதற்கும் ஏற்ற வகையில் தேசிய பங்களிப்பு ஓய்வூதிய நிதியம் எனும் பெயரிலான நிதியத்தை உருவாக்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான ஏற்பாடுகளை இயற்றுவதற்கு ஏற்ற வகையில் சட்டவரைவு ஒன்றைத் தயாரிக்க சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச ஊழியர் ஒருவர் அரச சேவையில் இணைந்துகொண்ட பின்னர் அவருடைய அடிப்படைச் சம்பளத்தின் 8 வீதமும், தொழில் வழங்குநரின் பங்களிப்பாக 12 வீதமும் மாதாந்தம் உத்தேச நிதியத்துக்கு வைப்பிலிடுதல் வேண்டும்.

உத்தேச நிதியத்தை முகாமைத்துவப்படுத்துவதற்காக முகாமைத்துவ சபையொன்றால் நிர்வகிக்கப்படும் சுயாதீன நிறுவனமொன்று உருவாக்கப்படுவதுடன், நிதியத்தை முகாமைத்துவப்படுத்துவதற்காக விசேட தகைமைகளைக் கொண்ட நிதிய முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

உத்தேச பங்களிப்பு ஓய்வூதிய முறைமை எதிர்வரும் காலங்களில் ஆள்சேர்ப்பு செய்யப்படும் அரச ஊழியர்களுக்கு ஏற்புடையதாக அமைவதுடன், 2016 ஜனவரி மாதத்தின் பின்னர் அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட ஊழியர்கள் அரசாங்கத்தால் தீர்மானிக்கப்படுகின்ற ஓய்வூதிய முறைக்கு இயங்கியொழுகுதல் வேண்டுமென்ற ஏற்பாடுகள், அவர்களின் ஆள்சேர்ப்பு நியமனக் கடிதங்களில் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், தமது சுயவிருப்பின் பேரில் உத்தேச தேசிய பங்களிப்பு ஓய்வூதிய சம்பள முறையுடன் இணைந்து கொள்வதற்கு அவர்களுக்கும் இயலும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# கடன் சுமையைத் தளர்த்த முக்கியமளிக்கும் சீனா!

## அதன் வெளியுறவுத்துறை பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கடுமையான கடன் சுமையை தளர்த்துவதற்கு தமது நாடு முக்கியத்துவமளித்து வருகின்றது என்று சீன வெளியுறவுத்துறை பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

இலங்கை, சம்பியா உள்ளிட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து அவற்றை மீட்பதற்கு ஜி - 20 நாடுகள் இணைந்து பங்காற்றி வருகின்றன.

இந்தநிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் விரைவான பொருளாதார மீட்சியை, இந்த நாடுகள் பெறுவதில் சீனாவின் வகிபாகம் என்னவென சீன வெளியுறவுத்துறை பேச்சாளரிடம் வினவப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் கடன் பிரச்சினை தொடர்பில் சீனா அவதானம் செலுத்துகின்றது.

இந்த நாடுகளின் கடன் சுமையை தளர்த்துவதற்கும் தாங்கள் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறோம். ஜி-20 கட்டமைப்பின் கீழ், கடன் நிவாரண முயற்சிகளில் தீவிரமாக பங்கேற்று ஒத்துழைப்பு வழங்குகின்றோம் - என்றார்.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து இலங்கைக்குக் கிடைக்க வேண்டிய கடன் உதவி, சீனா கடன் சான்றிதழ் வழங்குவதில் காட்டும் தாமதத்தாலேயே இன்னமும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# கச்சதீவுப் பெருவிழா நாளை: சகல ஏற்பாடுகளும் முழுமை

## உணவும் வழங்கப்படும் என்கிறார் மாவட்டச் செயலர்

கொழும்பு, மார்ச் 2

கச்சதீவு அந்தோனியார் ஆலயப் பெருவிழா ஏற்பாட்டுப் பணிகள் அனைத்தும் நிறைவு பெற்றுள்ளன என யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2023 ஆம் ஆண்டுக்கான கச்சதீவு புனித அந்தோனியார் பெருவிழா நாளை 3 ஆம் திகதியும் மறுநாள் 4 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டச் செயலக ஒருங்கிணைப்பில் யாழ்ப்பாண ஆயர் இல்லம், கடற்படையினர், நெடுந்தீவு பிரதேச செயலகத்தினர் உள்ளிட்ட சகல திணைக்களங்களும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குகின்றன.

உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு முன்னதாக காலை உணவு மாத்திரம் கடற்படையினரால் வழங்க ஒழுங்கமைக்கப்பட்டது.

தற்போது 3ஆம் திகதி இரவு உணவு, மறுநாள் காலை உணவு மற்றும் மீள் பயணத்துக்கான சிற்றுண்டி என்பன வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய பெருவிழாவுக்கான போக்குவரத்து ஒழுங்குகள், உணவு வசதிகள் உள்ளிட்ட அனைத்து ஒழுங்கமைப்புப் பணிகளும் நிறைவுற்றுள்ளன - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களவாடப்பட்ட நகைகள் உருக்கிய நிலையில் மீட்பு

## சந்தேகநபரும் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 2

பருத்தித்துறை - மந்திகைப் பகுதியில் இடம்பெற்ற 12 லட்சம் ரூபா பெறுமதியான நகை திருட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் அண்மையில் கைதுசெய்யப்பட்டுள்ளார். களவாடப்பட்ட நகையும் உருக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வருடம் மே மாதம் மந்திகை பகுதியில் 12 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளும் கையடக்கத் தொலைபேசி ஒன்றும் களவாடப்பட்டது என பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.


முறைப்பாட்டுக்கமைய காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் துன்னாலையைச் சேர்ந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் மேற்கொண்ட விசாரணையில், திருடப்பட்ட நகைகள் வவுனியாவில் இரு நகைக்கடைகளில் விற்பனை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டது.

அதற்கமைய விற்பனை செய்யப்பட்ட கடைகளிலிருந்து நகைகள் உருக்கப்பட்ட நிலையில் நகைகள் மீட்கப்பட்டன.

சந்தேகநபரும் சான்றுப்பொருள்களும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்த பருத்தித்துறை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)



# 'வரியை விதித்து வருத்தாதே' தொழிற்சங்கங்கள் போர்க்கொடி

## சகல சேவைகளும் நேற்று ஸ்தம்பிதம்; மக்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் தன்னிச்சையான முறையற்ற வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதனை மீளப்பெறுமாறு வலியுறுத்தியும் மேலும் சில கோரிக்கைகளை முன்வைத்தும் வேலைநிறுத்தப் போராட்டங்கள் நாடளாவிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

இலங்கைப் பெற்றோலியம், சிறிலங்கா ரெலிக்கொம், இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம் உட்பட 30 க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இந்த நிர்வாக முடங்கலில் இறங்கி அரசுக்கு எதிர்ப்பு வெளியிட்டன.

இதன்காரணமாக நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பல்வேறு சேவைகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதால் அவசர சிகிச்சைப்பிரிவுகள் தவிர்ந்த ஏனைய சேவைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டன. வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகள் இடம்பெறவில்லை.

கிளினிக், வெளிநோயாளர் பிரிவு ஆகியவற்றுக்கு வருகைதந்த நோயாளிகள் திரும்பிச் செல்லும் நிலை காணப்பட்டது.

அரச வங்கிகளின் அலுவலர்களும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் வங்கிச் சேவைகளும் முடங்கியே காணப்பட்டன.

பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்கள், அதிபர்கள் நேற்று கறுப்பு உடை அணிந்து மற்றும் கறுப்புப் பட்டி அணிந்து கடமைக்கு சமுகமளித்திருந்தனர்.

**யாழ்ப்பாணத்தில்....**

நாடு தழுவிய ரீதியில் வரிச் சீர்திருத்தத்தை உடன் நிறுத்துமாறு கோரி முன்னெடுக்கப்படும் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவாக யாழில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது. போராட்டத்தில் வங்கி ஊழியர் சங்கம், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், மின்சாரசபை பொறியியலாளர் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் பங்கேற்று ஆதரவு வழங்கின.

**கிளிநொச்சியில்...**

கிளிநொச்சி மாவட்டத்தில் தொழிற்சங்கப் போராட்டத்துக்கு ஆதரவளித்து அரச வங்கிகள் முழுமையாக மூடப்பட்டு சேவைகள் எவையும் இடம்பெறவில்லை. இதனால் மக்கள் வங்கிச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. அதேவேளை மின்சாரசபை ஊழியர்களும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

**வவுனியாவில்....**

அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் வவுனியாவிலும் முன்னெடுக்கப்பட்டது. மாவட்டத்தின் பல்வேறு சேவைகள் ஸ்தம்பிதமடைந்தமையால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். (ச-113,110, 9, 18,20)



# வன்முறைக்கும்பல் காரை நொருக்கியது

## ஒரே வாரத்தில் இரண்டாவது சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

வீட்டினுள் நள்ளிரவு வேளை உள்நுழைந்த வன்முறைக் கும்பலொன்று நிறுத்தி வைக்கப்பட்ட காரை சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளது என உரிமையாளரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலிப் பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வேளை இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த 3 பேர் கொண்ட குழுவினரே அத்துமீறி வீட்டினுள் நுழைந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரை சேதப்படுத்தி தப்பிச் சென்றுள்ளனர் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்படுகிறது.

முறைப்பாட்டுக்கமைய கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இளவாலை பனிப்புலத்திலும் இவ்வாறானதொரு சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-125)

# கண்ணிவெடி அகற்றும் பகுதியில் சட்டவிரோதமான மணல் அகழ்வு

## முறைப்பாடு வழங்கியும் நடவடிக்கையில்லை



கிளிநொச்சி, மார்ச் 2

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகமாலையில் தனியார் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்ணிவெடி அகற்றும் பகுதியில், சட்டவிரோதமான மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறைப்பாடு வழங்கியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

போர் முடிவடைந்த காலத்திலிருந்து முகமாலையில் கண்ணிவெடி அகற்றும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அப்பகுதியில் பொதுமக்கள் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதோடு அபாயப் பகுதியாகவும் பெயரிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் ஒரு சில உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இதே பகுதியில் நீண்ட காலமாக இரவு பகலாக சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பில் ஏற்கனவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளபோதிலும் அதற்குரிய நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை

முகமாலைப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் மிகவும் ஆபத்தானவை. அவை பெருமளவில் சேதத்தை விளைவிக்கக் கூடியவை. எனவே சட்டவிரோதமான மணல் அகழ்வில் ஈடுபடுவோர் கண்ணிவெடிகளில் சிக்குண்டு ஏதாவது விபரீதம் ஏற்பட்டால் அதனை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களும் மிகுந்த சிரமத்துக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எனவே இந்த அபாயகரமான பகுதியில் மணல் அகழ்வுக்கு ஒத்துழைக்கும் உயர் அதிகாரிகள் பொதுமக்களின் நலன் சார்ந்து செயற்பட வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14,20,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** செலவு செய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்னை ஏற்படக் கூடும் . கவனம் தேவை. சிலருக்கு எதிர் பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். நண் பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற் படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு எதிர்பாராத பணவர வுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம் :** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியே ஏற்படும். எதிர்பார்த்த காரி யம் முடியும்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக் கும். எதிர்பார்த்த காரியம் சாதகமாகும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற் படுவீர்கள். நண்பர்கள் மூலம் கிடைக் கும் செய்தி மகிழ்ச்சி தருவதாக இருக் கும். புதிய முயற்சி சாதகமாக முடியும். எதிர்பார்த்த பணம் கிடைக்கக்கூடும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகர மாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்க ளால் மறை முகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். சிறு சங்கடம் ஏற்படும்.

**விருச்சிகம் :** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் ஆலோசனை அவசியம். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவை களை நிறைவேற்றுவீர்கள்.


**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்க வும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அள வில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கருத்து வேறுபாடுகள் நீங்கும். குடும்பத்தின ரின் தேவைகளை நிறைவேற்று வீர்கள். உறவினர்களிடம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

# பாடசாலை செல்லும் சிறுமிகளுக்கு விஷம்

## ஈரானில் தொடரும் கொடுமை



தெஹ்ரான், மார்ச் 2

ஈரானில் பாடசாலை செல்லும் மாணவிகளைத் தடுப்பதற்காக மத அடிப்படைவாதிகள் சிலர் அவர்களுக்கு விஷம் வைத்த சம்பவங்கள் அங்கு அரங்கேறியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஈரானில் ஹிஜாப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பெண்கள் அங்கு தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். 3 மாதங்களுக்கும் மேலாக நடந்த இந்தப் போராட்டத்தில் 300க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்ட பலருக்கு ஈரானால் தூக்குத் தண்டனை அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் உடை கட்டுப்பாட்டு விதியை மீறியதாக மாஷா அமினி என்ற இளம்பெண் பொலிஸாரின் கொடூரத் தாக்குதலில் உயிரிழந்தார். இவ்வாறாக பெண் கல்வி, பெண்கள் முன்னேற்றத்துக்குத் தடையாக மோசமான சம்பவங்கள் ஈரானில் அரங்கேறி வருகின்றன.

இந்தநிலையில் ஈரானில் பள்ளிக்குச் செல்லும் மாணவிகளைத் தடுப்பதற்காக அவர்களுக்கு மதஅடிப்படைவாதிகள் சிலரால் விஷம் வழங்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. பள்ளிக்குச் செல்லும் மாணவிகளுக்குத் தொடர்ந்து வயிற்றுவலி, தலைவலி, வாந்தி, மூச்சுவிடுவதில் சிரமம் உள்ளிட்டவற்றால் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மருத்துவப் பரிசோதனையில் அவர்கள் உடலில் விஷம் கலந்து இருந்தது தெரியவந்துள்ளது.

மாணவிகளுக்கு விஷம் வைக்கப்பட்டுள்ள தகவலை ஈரான் கல்வித் துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது. இந்தக் கொடூரமான செயலுக்குக் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. (ச-இ)


# மரண அறிவித்தல்

பிறப்பு 28 . 04 . 1954



இறப்பு 01 . 03 . 2023

## திருமதி தங்கராசா நிர்மலாதேவி

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், கட்டப்பிராய் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா நிர்மலாதேவி நேற்று (01.03.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசு - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு புதல்வியும், தங்கராசாவின் (ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் - யாழ் மாநகரசபை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற காசுபதி - இராசு தம்பதிகளின் அன்பு மருமகளும், சஹிர்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கோப்பாய் பிரதேச சபை), பிரதாபன் (சுவீடன்), பிரியதர்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மயூரன், சிந்துஷா (சுவீடன்), அஜந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், அக்ஷிகா, தமிக்கா, சமந்தா, அலிஷியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இராசநாயகம், அருந்தவராஜா (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை), மனோகரராஜா , ஜெயராஜா ( லண்டன்), செல்வதேவி ( சுவீடன்), தயாபரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இரத்தினபூபதி, வினோதினி, காலஞ்சென்ற நாகராஜா மற்றும் புஸ்பராஜா (கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்), ஜெயராணி (பிரான்ஸ்), சரோஜினி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2023) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு கொண்டு செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 358 1025

(C5/23779)4,6

# மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 09 . 1971



இறப்பு 01 . 02 . 2023

## மரியநாயகம் வீலிக்ஸ்

கிளாலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் வீலிக்ஸ் நேற்று (01.03.2023) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் வீலிக்ஸ் அருள்வதனியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மரியநாயகம் மேரி ஜெசிந்தா தம்பதியரின் அன்பு மகனும், மாறி டிலூசியா, மாறி அனற் டொறிஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மேரி றெஜினா (Australia), ஜெனந்தன் (France), காலஞ்சென்றவர்களான றொபின்சன், லோறன்ஸ் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (03.03.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கிளாலி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கிளாலி, எழுதுமட்டுவாள்.
077 6536 551
077 899 4219

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 39350) 1-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சொல்லைவிட செயலே சிறந்தது

**யா**ழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், நீண்ட பிரயத்தனங்களின் பின்னர் தற்போது மீண்டும் இயங்க ஆரம்பித்திருக்கின்றது. இப்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான – தமிழகத்திலிருந்து பலாலி வரையான – விமான சேவைகளே முன்னெடுக்கப்படுகின்றன.

'யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம்' 2019 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி அப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் திறக்கப்பட்டது. தமிழ் மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இந்த விமான நிலையம் கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் மூடப்பட்டது. இந்திய நிதியுதவியுடன் சீரமைக்கப்பட்டு யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் இயங்க ஆரம்பித்த போதும், அதை வினைத்திறனுடன் இயங்க வைக்கும் ஆர்வம் இலங்கை அரசாங்கத்திடம் இருக்கவில்லை. தமிழ்நாட்டுக்கான விமான சேவைகளே நடத்தப்பட்டிருந்த நிலையில், மட்டுப்படுத்தப்பட்ட சிறிய பயணிகள் விமானங்களே சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. வடக்கில் அமைக்கப்படும் சர்வதேச விமான நிலையத்தால் வடக்கு மாகாணத்துக்கும் தமிழ் மக்களுக்கும் பொருளாதார ரீதியான அனுகூலங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்த தமிழ் மக்களுக்கு ஏமாற்றமே கிட்டியது.

நீண்ட இடைவெளியின் பின்னர் இப்போது மீண்டும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் இயங்க ஆரம்பித்திருக்கும் நிலையில், வடக்கு மாகாண சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிக்க யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் நிரந்தர விற்பனைத் தொகுதி அமைக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் அறிவித்திருக்கின்றமை வரவேற்புக்குரியது. வடக்கு மாகாணத்தின் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவும், உள்ளூர் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தவும் இது ஒரு பெரும் வாய்ப்பாக இருக்கும். உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச் செல்லவும் இது வழிவகுக்கும். பொருளாதார எழுச்சியை எதிர்பார்த்திருக்கும் மக்களுக்கு பேருதவியாகவும் இருக்கும். வாய்வார்த்தையாக இல்லாது அதைச் செயலிலும் வடக்கு ஆளுநர் காட்ட வேண்டும்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து இப்போது தமிழ்நாட்டுக்கான விமான சேவைகளே முன்னெடுக்கப்படுகின்றன. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடக்கும் விமான சேவைகளில் குறைந்தளவானோரே பயணிக்கின்றனர். விமான நிலையத்தின் ஊடாக நடக்கும் விமான சேவைகளை அதிகரித்தாலேயே வடக்கு ஆளுநரின் யோசனை முழு வெற்றியடையும். இல்லாவிட்டால் 'ஆளில்லாக் கடையில் தேநீர் ஆற்றும்' செயலாகவே இருக்கும் என்பதையும் ஆளுநர் மனதில் கொள்ள வேண்டும்.

**நாளொரு நல்வார்த்தை**

"கஷ்டம் வரும்போது கண்ணை மூடாதே. அது உன்னைக் கொன்று விடும். கண்ணைத் திறந்து பார் நீ அதை வென்று விடலாம்"

– அப்துல் கலாம்



# நெல் கொள்முதல் வரிநீக்கம்: அரிசி விலைகள் குறையலாம்!

கொழும்பு, மார்ச் 2

எதிர்வரும் நாள்களில் அரிசியின் விலைகள் சந்தைகளில் குறிப்பிடத்தக்களவு குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



நெல் கொள்வனவு செய்யும் போது விதிக்கப்படும் சமூகப் பாதுகாப்பு வரி நீக்கப்பட்டுள்ளமையால் இந்த விலைகுறைப்பு இடம்பெறலாம் எனக் கூறப்படுகிறது. இதுவரை காலமும் நெல் கொள்வனவின் போது 2.5 வீதம் சமூகப் பாதுகாப்பு வரி அறவிடப்பட்டது. நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கமைய இந்த வரி நீக்கப்பட்டுள்ளது.

வரிநீக்கத்தின் அடிப்படையில் சந்தைகளில் அரிசியின் விலையில் மாற்றம் ஏற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விவசாயிகளுக்கு நெல்லுக்கான கூடுதல் விலையையும், நுகர்வோருக்கு அரிசிக்கான குறைந்த விலையையும் உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப்பிட்டிய தெரிவித்தார். (ச-இ)

# கடந்த ஆண்டு மே போராட்டத்தில் 180 வீடுகள், 100 வாகனங்கள் சேதம்

கொழும்பு, மார்ச். 2

கடந்த ஆண்டு மே மாதம் இடம்பெற்ற போராட்டத்தின்போது, 180 வீடுகளும், 100 வாகனங்களும் சேதமாக்கப்பட்டன என்று அரச இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களம் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பிரதி இராசாயனப் பரிசோதகர் பீ.ஜீ.மடவல,

மே போராட்டத்தில் வீடுகள், வாகனங்கள் சேதமடைந்தன. எனினும் எந்த உயிர் சேதமும் ஏற்படவில்லை.

அத்துடன் அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் இல்லத்துக்கு தீ வைப்பதற்காக எந்தச் சந்தர்ப்பத்திலும் எரிபொருள் பயன்படுத்தப்படவில்லை - என்றார். (ஒ-14, இ)

# மைத்திரியின் மனுவை நிராகரித்தது நீதிமன்று

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது. ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி தமக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வழக்குகளையும் நிராகரிக்கவேண்டும் என்று மைத்திரிபால சிறிசேன கோரியிருந்தார். இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பான வழக்குகளில் இருந்து தன்னை விடுவிக்க உத்தரவிட வேண்டும் என்றும் அவர் மேன்முறையீட்டு மனுவில் கோரியிருந்தார். (எ-இ)

**நாளை** 03.03.2023 வெள்ளிக்கிழமை மாசி 19

சுபநேரம் : 06.27 – 07.57
ராகுகாலம் : 10.57 – 12.27

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடுகளைக் குளிப்பாட்ட சுத்தமான நீர் எதற்கு?

## ஆர்ப்பாட்டக்காரர்களைச் சீண்டும் சனத் நிஷாந்த

கொழும்பு, மார்ச் 2
தேசிய மக்கள் சக்தி கொழும்பில் ஏற்பாடு செய்தி ருந்த பேரணியைக் கலைப்பதற்காக கொழும்பு பேர ஏரியின் நீரை பொலிஸார் பயன்படுத்தியுள்ளனர் என்று இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
அனைத்து விலைகளும் உயர்ந்துள்ள இந்த நேரத்தில், இந்தக் காடையர்கள் குளிப்பதற்கு சுத்தி கரிக்கப்பட்ட தண்ணீர் எதற்கு? மாடுகளைக் குளிப் பாட்டுவதற்கு சுத்தமான தண்ணீர் தேவையில்லை - என்றார்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அடக்குவதற்கு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குப் பெரும் கண்டனங்கள் எழுந்துள்ளன.
அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையிலேயே சனத் நிஷாந்த மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# ரணிலின் சர்வாதிகாரப் போக்கு பாரதூர விளைவை ஏற்படுத்தும்

## எச்சரிக்கின்றார் சம்பிக்க

கொழும்பு, மார்ச் 2
தமிழர் நலனுக்காகக் கரிசனை கொள்வதாகக் குறிப்பிட்டு எம்மை இனவாதிகளாகச் சித்திரிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி தான் 1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழர்களை படுகொலை செய்து அந்த பழியை மக்கள் மீது சுமத்தியது. ஜனநாயக போராட்டத்தை சர்வாதிகாரமாக அடக்கும் ஜனாதிபதியின் செயற்பாடுகள் நாட்டில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இவ்வாறு 43 ஆவது படையணி யின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
பத்தரமுல்லவில் நேற்றுமுன் தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனநாயகத்துக்கு எதிராக அதிகா ரத்தை தக்கவைத்துக் கொள்ளும் கொள்கை ஐக்கிய தேசியக் கட் சிக்கு உண்டு. சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற வன்முறை களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி பொறுப்புக்கூறவேண்டும்.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை திட்டமிட்ட வகையில் பிற்போட்டுள் ளது. அரசமைப்பின்படி எதிர்வரும் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டும்.
ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் வரை எந்தத் தேர்தலையும் நடத்தப் போவதில்லை என்பதில் ஜனாதிபதி உறுதியாகவுள்ளார்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும் பில் மேற்கொண்ட போராட்டத்தில் பொலிஸார் வன்மமான முறை யில் அடக்குமுறைகளை கட்ட விழ்த்து விட்டமை கண்டிக்கத்தக் கது. போராட்டத்தில் தாக்கப்பட்டு சிரேஷ்ட பிரஜை ஒருவர் மரணம டைந்துள்ளார். அதைப் படுகொ லையாகக் கருத வேண்டும்.
ஜனாதிபதி பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்டதை நாட்டு மக்கள் பட்டாசு கொளுத்திக் கொண்டாடி னார்கள். இந்தச் சம்பவங்களை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நன்கு அறிவார்கள் - என்றார். (எ-இ)

# ரணில் கூறிய கருத்தால் சட்டத்தரணிகள் கொதிப்பு

கொழும்பு, மார்ச் 2
உள்ளூராட்சிமன்றத்தேர்தல்களை நடத்துவது தொடர்பான உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய் யப்பட்ட வழக்கில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் முன் னிலையானமை தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் வெளியிட்ட கருத்துக்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளது.
நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, 'இந்த விவகாரத்தில் எந்தவொரு தரப்புடனும் தொடர்புபடாத சட்டத்தரணியொருவரை நியமிக்க வேண்டும் என்பதை நானும் ஏற்றுக்கொள்கின் றேன். இருப்பினும் இங்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் இல்லை, இந்த அரசாங்கத்தை இயக்க முடியாது என்று கூறியவரையே தேர்ந்தெடுத்திருக் கின்றார்கள். அவரை விடவும் ஐக்கிய மக்கள் சக்தி அல்லது மக்கள் விடுதலை முன்னணியைச்சேர்ந்த சட்டத்தரணியை தேர்ந்தெடுத்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்' என்று குறிப்பிட்டிருந்தார்.
இது தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சட்டக் கட்டமைப் பின் மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை வலுவிழக்கச்செய்யும் வகையிலானதும் சட்டத்தின் ஆட்சியில் தீவிர தாக்கத்தை ஏற்படுத்தவல்ல நீதி மன்றக் கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையைப் புறந்தள்ளும் வகையிலானதுமான கருத்துக்களை வெளியிடவேண்டாம் என்று வலியுறுத்தியுள்ளது. (எ-இ)

# சர்வாதிகாரப் போக்கை கைவிடவேண்டும் ரணில்

## வாசுதேவ வலியுறுத்துகிறார்

ஜனநாயக உரிமைக்கான போராட்டத்தை சர்வாதிகாரமான முறையில் அடக்குவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவிர்த்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்துக்கு எதிரான தொழிற்சங்கப் போராட்டங் களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.
இவ்வாறு இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.
இடதுசாரி ஜனநாயக முன்னணி காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேசிய மக்கள் சக்தியினர் கடந்த 26ஆம் திகதி கொழும்பில் நடத்திய போராட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகித்தமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.
பொலிஸாரின் வன்முறையான செயற்பாட்டால் ஒருவர் உயிரிழந் துள்ளார். இதற்கு ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும். ஜனநாயக உரிமைக்கான போராட்டத்தை சர்வாதிகாரமான முறையில் அடக்குவதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவிர்த்துக் கொள்ளவேண்டும்.
பொருளாதார நெருக்கடியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக் களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கம் புதிய வரிக் கொள்கையை நடைமுறைப்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் வரிக் கொள்கை மற்றும் ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாட்டுக்கு எதிராக தொழிற்சங்கத்தினர் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு முழுமை யான ஒத்துழைப்பு வழங்குவோம் - என்றார். (எ-இ)

# வாக்குரிமையைப் பறித்தெடுத்து அரசாங்கம் மிலேச்சத்தனம்!

## தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் கண்டனம்




நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையை பறித்தெடுப்பதற்கு கடுமையான அடக்குமுறை களைப் பிரயோகிக்கும் ஜனாதிபதி தலைமை யிலான அரசாங்கத்தின் மிலேச்சத்தனம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் தெரிவித் துள்ளது.
இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பிவைக் கப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:-
தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய மக்கள் சக்தியால் ஒழுங் கமைக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் பங்கேற்ற ஒருவர் பொலிஸாரின் கடுமையான அடக்குமுறையில் உயிரிழந்துள்ளார்.
பொலிஸார் மேற்கொண்ட கண்ணீர்ப்புகை தாக்குதல் மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தால் காயமுற்ற நிவிதிகல பிரதேசசபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரே இதன்போது உயி ரிழந்துள்ளார்.
அதேநேரம் 28 பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
அரசாங்கத்தின் கடும்போக்கான இந்தச் செயற்பாடு நாட்டு மக்களின் ஜனநாயக உரி மையைப் பறித்தெடுப்பதை வெளிப்படுத்துகி றது. மக்கள் வாக்களிக்கும் உரிமையைப் பாது காப்பதற்கு அரசாங்கமும் அரச அதிகாரிகளும் கடமைப்பட்டவர்களாவர் என்பதை அவர்கள் நினைவிற்கொள்ளவேண்டும்.
எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய ஜனநாயகப் போராட்டங்களைத் தடுத்தல், தடை செய்தல் மற்றும் வன்முறையை பிரயோகித்தலில் இருந்து அரசாங்கம் விலகி மக்களின் உரிமை களைப் பாதுகாக்க வழிவகுக்க வேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயற்பட்டு மகிழ்வோம்

சாவகச்சேரி, மார்ச் 2

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலய மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு, நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது. வித்தியாலய அதிபர் ச.துளசிதாசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன் கலந்துகொள்ளவுள்ளார்.

(ஒ-14-9)


# Face Clinic at Royal Medical Centre

**ஆனது உங்கள் முகம், தாடைகள், தோல் மற்றும் கூந்தலுக்கு முழுமையான அறுவை சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை அல்லாத சிகிச்சையை வழங்குகின்றது.**



- சிகிச்சையின் ஒவ்வொரு கட்டத்திலும் மிக உயர்ந்த தரமான கவனிப்பையும் பெறுவீர்கள்
- முகத்திலுள்ள தழும்புகள் நீக்கல்
- முகத்தோல் கட்டிகள் மற்றும் குறைபாடுகளை நீக்கல்
- முக மறுசீரமைப்பு சிகிச்சைகள்
- கண் மடல் சம்பந்தமான சிகிச்சைகள்
- வெளிக்காது மடல் அமைப்பு சீர் திருத்தம்
- கண்புருவம் சம்பந்தமான சத்திர சிகிச்சைகள்
- உதடு மற்றும் அண்ணப்பிளவு சீராக்கல்
- பல் நாட்டல் சிகிச்சைகள் - Dental Implant
- முகத்தோல் அழகுபடுத்தல் சிகிச்சை

**சம்பந்தமான ஆலோசனை பெற முகம் தாடை சிறப்பு வைத்தியர் வருகை தருகிறார்**

**முன்பதிவுக்கு: 077 654 4731**

**றோயல் மெடிக்கல் சென்ரர்**

**455, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**


## மரண அறிவித்தல்

### திரு. நாகலிங்கம் தவராஜா



மயிலிட்டி தெற்கு, கட்டுவன் தெல்லிப் பழையைப் பிறப்பிடமாகவும், நாகலிங்கம் வீதி, தாவடி தெற்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நாகலிங்கம் தவராஜா அவர்கள் நேற்று (01.03.2023) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இலச்சுமி தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான கனகசபை - கனகம்மா தம்பதியரின் மருமகனும், பவளம் மாவின் அன்புக் கணவரும், கார்த்தீபன், பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனுயாவின் பாசமிகு மாமனாரும், சாய்சரண், மகதி ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற தவமணி மற்றும் கனகாம்பிகை, நல்லம்மா (செல்வராணி), செல்வரத்தினம் (சின்னன்), செல்வராஜா (பிரான்ஸ்), சிறிமுருகராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் நவரத்தினம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நல்லையா மற்றும் சிவயோகநாதன் (லண்டன்), சிவசோதி (பேபி), அனுசா (பிரான்ஸ்), சிறிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நாகலிங்கம் வீதி, தாவடி தெற்கு கொக்குவிலில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நாகலிங்கம் வீதி, தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**மகன் - த.கார்த்தீபன் - 077 15 00 611**
**மகன் - த.பிரதீபன் - 077 1501 694**

(CS 23783)1-6

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

### பெறுகை அறிவித்தல்

### 2023ம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு, பாதுகாப்பு, சாரதி, வெளிக்களத் தொழிலாளி சேவைகளுக்கான விலைமனுக் கோரல்

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேசசபையில் 2023 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு சேவை (Cleaning Service) காவற்கடமை, சாரதி, வெளிக்களத் தொழிலாளி சேவையை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை் வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவையும் நாளாந்த பணிக்காலமும் | தேவையான ஆளணி எண்ணிக்கை | ஒப்பந்த காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|
| NP/14/41(15)/02/PC/01 | சாரதி சேவை (09 மணி.) | 03 | 365 நாட்கள் | 21,000.00 | 11.06.2023 |
| | வெளிக்களத் தொழிலாளி சேவை (09 மணி.) | 02 | | | |
| NP/14/41(15)/02/PC/02 | சுத்திகரிப்பு சேவை (08 மணி.) | 10 | 365 நாட்கள் | 32,000.00 | 11.06.2023 |
| NP/14/41(15)/02/PC/03 | பாதுகாப்பு சேவை (12 மணி.) | 04 | 365 நாட்கள் | 19,000.00 | 11.06.2023 |

01. சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு, காவற்கடமை, சாரதி, வெளிக்களத் தொழிலாளி சேவையை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நிறுவனமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

02. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

03. சேவை வழங்குநர்கள் ஒவ்வொரு பெறுகைக்குமான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள தனித்தனி பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 02.03.2023 தொடக்கம் 15.03.2023 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ.3.000.00 ஐச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

04. பெறுகை ஆவணங்கள் 15.03.2023 **ம் திகதி பி.ப 3.00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு **"தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்".** என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.


05. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

**க.தர்ஷன்**
**தவிசாளர்,**
**பெறுகைக்குழு,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**
**02.03.2023**

(ct. 39347) (2.3)

## மரண அறிவித்தல்

பிறப்பு 02 . 08 . 1951



இறப்பு 25 . 02 . 2023

### பொன்னுத்துரை கோபாலகிருஸ்ணன்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் நாட்டில் வசித்து தற்பொழுது கலட்டி லேன், கோண்டாவில் மேற்கில் வசித்தவருமாகிய பொன்னுத்துரை கோபால கிருஸ்ணன் கடந்த (25.02.2023) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - அருளம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்ற கனகராசா - இராசமணி ( ஜேர்மனி) தம்பதிகளின் அன்பு மருமகனும், இரஞ்சிதமலரின் பாசமிகு கணவரும், புஸ்பராணி (கனடா), பரமேஸ்வரன், செல்வராணி (கனடா), யோகராணி, இந்திராணி (கனடா), விஜயராணி (கனடா), புஷ்பநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற குணசேகரம் (கனடா) மற்றும் இராஜேஸ்வரி, ஜோர்ஸ் (கனடா), சண்முகலிங்கம், யோகரட்ணம் (கனடா), தாசன் ( கனடா), அன்னலச்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், சுதாகரன் (சுவிஸ்), கிருபாகரன் (சுவிஸ்), காலஞ்சென்ற ரவீந்திரா (சுவிஸ்) மற்றும் கோமதி (சுவிஸ்), நிரஞ்சனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வனஜா (சுவிஸ்), கோமளா (சுவிஸ்), பிரதீபன் (சுவிஸ்), அருள்சோதி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், சுவிஸில் வசிக்கும் ஆகாஸ், அக்ஷயா, அஸ்வின், சயான், சயானி, கபினாஷ், கீர்த்திகா, தனுஷா, தீபினா, அக்ஷயா, ஆருயா, ஆரணி, டென்மார்க்கில் வசிக்கும் சபீனா, ஜேசன் ஆகியோரின் அன்புப் பேரனும், தவராசா (ஜேர்மனி), சுவேந்திரராசா (சுவிஸ்), நிர்மலாதேவி (ஜேர்மனி), விஜயமணி (ஜேர்மனி), காலஞ்சென்ற ஆனந்தராசா (ஜேர்மனி), செல்வராசா (சுவிஸ்), காலஞ்சென்ற நித்தியராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2023) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கலட்டி லேன்,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 23762)4.6

**077 398 5521**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச கண் பரிசோதனையும் மூக்குக்கண்ணாடி வழங்கலும்

யாழ்ப்பாணம், மார்ச் 2
காங்கேசன்துறை கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், கோண்டாவில் பிரதேச மக்களுக்கான இலவச கண் பரிசோதனை, பார்வையில் குறைபாடு காணப்படுவோருக்கு மூக்குக்கண்ணாடி வழங்கலும், கோண்டாவில் நாராயணன் சனசமூக நிலைய மண்டபத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.
கண்பார்வையில் குறைபாடு காணப்படும் மக்களை கண் பரிசோதனையில் கலந்துகொள்ளுமாறு கோல்டன் ஸ்ரார் லயன்ஸ் கழகத் தலைவி லயன்சீமாட்டி நளினா பிரேம்லால் அறிவித்துள்ளார்.
(ஒ-14-9)



கிளிநொச்சி உமையாள்புரம் அ.த.க. பாடசாலை நிறுவுநர் அமரர் பொன்னம்பலம் வேலுப்பிள்ளையின் உருவச்சிலை அண்மையில் திரை நீக்கம் செய்யப்பட்டது.
அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த நிறுவுநரின் மகள் இலங்காதேவி மனோகரன் உருவச்சிலையை திரைநீக்கம் செய்துவைத்தார். (ய-9)

# இல்ல மெய்வன்மைப்போட்டி


யாழ்ப்பாணம், மார்ச் 2
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி, நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக ஐக்கிய இராச்சியத் தமிழ் துடுப்பாட்டச் சங்கத்தின் முன்னாள் தலைவர் து.பிரபாகரன் கலந்துகொள்ளவுள்ளார்.
(ஒ-14-66)

★★★★

யாழ். மார்ச் 2
இணுவில் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைத் திறனாய்வு, நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் வே.உதயமோகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக வலிகாமம் வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கணபதிப்பிள்ளை சந்திரலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.
(ஒ-14-66)

## 1ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
02 . 08 . 1933



மறைவு
14 . 03 . 2022

### அமரர் நன்னி செல்லையா

அன்பும் பண்பும் நிறைந்த எனது
ஆருயிர் நாயகனை வணங்கி
நிற்கின்றேன் எங்கு தான் சென்றீரோ
நான் அறியேன்.

விழிகளுடன் மனைவி,

(cs23778) (2.6)

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவியரே!
வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!!
உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling
அழகுக் கலை, Facials, மணப்பெண் அலங்காரம்,
பலவிதமான சேலை அணியும் முறைகள், ஆரி எம்ரோய்டரி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் : 04.03.2023 சனி காலை 10.30
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் : 08.03.2023 புதன் காலை 10.30
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

# மரண அறிவித்தல்



## இரத்தினேஸ்வரன் பவிதன்


நீர்வேலி தெற்கு நீர்வேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரன் பவிதன் அவர்கள் கடந்த (28.02.2023) அன்று அகால மரணமடைந்துள்ளார்.
அன்னார் இரத்தினேஸ்வரன்-சசிகலா தம்பதியரின் பாசமிகு மகனும், யதுர்சிகனின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நீர்வேலியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மலர்வு 08.09.2000
உதிர்வு 28.02.2023
தகவல்: குடும்பத்தினர்.

(CS 23786) 1-6

# மரண அறிவித்தல்

மலர்வு
18 . 04 . 1927



உதிர்வு
28 . 02 . 2023

## பொன்னப்பா சரவணமுத்து (மூத்ததம்பி)

(முன்னாள் மணல் தோட்டக்கணக்கர்)

புலோப்பளை பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது பளை நகரத்தில் வசித்து வந்தவருமான பொன்னப்பா சரவணமுத்து நேற்றுமுன்தினம் (28.02.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னப்பா வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற பாலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, கனகசபை, சிதம்பரப்பிள்ளை, சிவக்கொழுந்து ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பரமேஸ்வரி (புலோப்பளை), சதாசிவம் (லண்டன்), செல்வராசா (தர்மக்கேணி), கோபாலகிருஸ்ணன் (மிருசுவில்), செல்வரத்தினம் (லண்டன்), சிவனேஸ்வரி (வரணி), முரளீதரன் (பளைநகரம்), தனபாலன் (லண்டன்), சறோஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசுப்புரமணியம், கமலகுமாரி, சுதாஜினி, கமலினி, கமலேஸ்வரி, கனகரத்தினம், ரேவதி, அனுஷா, காலஞ்சென்ற பிரபாகரன் ஆகியோரின் மாமனாரும், சிவகுமார், காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் கவிதா, பிருந்தா, சிந்துஜா, துவாரகா, கீர்த்தனா, தீபா, கௌசிகா, கிருசிகா, பத்மாசனன், கனிச்செல்வி, பாமினி, தயாளினி, சாகித்தியா, காருணியா, சாருஷா, மோகனன், லிகிர்தன், சுபா, குகராம், கேசிகன், அபி, சகானா, கபினா, கோபிகா ஆகியோரின் அன்புப் பேரனும், அபிசாருதன், ரதுஷ, யமிஷ, நேயன், அகன், திரனா, சஞ்சனா, ஆரன், ஆரியன், ஆருஷன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் புலோப்பளை பொற்பத்தை இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பளை நகரம்,
பளை.

தகவல்:
குடும்பத்தினர்

(cs49283) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13th JAFFNA INTERNATIONAL TRADE FAIR யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை

CONCURRENTLY WITH KALVI JAFFNA 2023

JITF 2023

www.jitf.lk jitf.lk

MARCH மார்ச்
3rd 4th 5th
9.00 மு.ப - 7.00 பி.ப
Muttraweli Grounds
(Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம்
(யாழ் கோட்டைக்கு அருகில்)

நாளை தொடங்குகிறது

MAIN SPONSOR TOKYO CEMENT GROUP
CO SPONSOR Maliban Inspiring Goodness
ORGANIZED BY LECS LANKA EXHIBITION
IN ASSOCIATION WITH

OFFICIAL PARTNERS
SNACK · SPICE · ILLUMINATION · HYGIENE · T-SHIRT · PRINT MEDIA உதயன் · EDUCATION NorthernUNI · TYRE AROMA · RENEWABLE ENERGY Hayleys Solar · RIDING



### யாழ்.சர்வதேச விமான நிலையத்தில்

# சிறுஉற்பத்தியாளர்களுக்கு நிரந்தரமான விற்பனைக் கூடாரம்

## வடக்குமாகாண ஆளுநர் உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 2

வடமாகாண சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிக்க யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தில் நிரந்தர விற்பனைத் தொகுதி விரைவில் அமைத்துக் கொடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா உறுதியளித்துள்ளார்.

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற உள்ளூர் உற்பத்திகளின் விற்பனைக் கண்காட்சியை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உள்ளூர் சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் சிறந்த சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும் பல்வேறு வேலைத் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. வடமாகாண சிறு உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை கொழும்புக்கும் சர்வதேச மட்டத்துக்கும் எடுத்துச் செல்வதற்கு யாழ்.சர்வதேச விமான நிலையத்தில் நிரந்தர உற்பத்திக் கூடாரத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். அதேபோன்று கொழும்பிலுள்ள எமது அலுவலகத்திலும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் தொடர்பில் விளம்பரப் படுத்தி ஓடர்களை வடக்கில் இருந்து அனுப்பக்கூடிய வகையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

மூன்றாவது தடவையாக ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் உள்ளூர் உற்பத்தியாளர்களின் விற்பனைக் கூடங்கள் நிறுவப்பட்டு விற்பனையும் கண்காட்சியும் இடம்பெற்று வருகிறது.

அதேபோன்று யாழ்.புதிய பஸ் நிலையம் மற்றும் யாழ்.கலாசார மண்டபம் ஆகிய பகுதிகளிலும் உற்பத்திப் பொருள்களை காட்சிப் படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து தொடர்ச்சியாக உள்ளூர் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஒ-14)

### நவீன முறையில்

# உ.கிழங்கு செய்கை அமோக விளைச்சல்

யாழ்ப்பாணம் - அச்சுவேலி பத்தமேனியில் சொட்டு நீர்பாசனத்தைப் பயன்படுத்தி பொலித்தீன் மூடுபடையைக் கொண்டு நவீன முறையில் மேற்கொள்ளப்பட்ட உருளைக்கிழங்கு செய்கையின் அறுவடையை யாழ். மாவட்டச்செயலர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

சாதாரண முறையில் உருளைக்கிழங்கு செய்கையை மேற்கொண்டு வந்த செய்கையாளர்கள், இம்முறை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் பொலித்தீன் மூடுபடையைக் கொண்டு செய்கையை மேற்கொண்டனர். இதன்மூலம் உருளைக் கிழங்கு செய்கை அதிகளவில் விளைச்சலை ஏற்படுத்தியுள்ளது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் 55 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நவீன முறையில் உருளைக்கிழக்கு செய்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. கோப்பாய் பிரதேச செயலகத்தில் அச்சுவேலி, நவக்கிரி, வளலாய், பத்தமேனி ஆகிய கிராமங்களிலும் உடுவில் பிரதேச செயலகத்தில் சுன்னாகத்திலும் தெல்லிப்பழைப் பிரதேசசெயலகத்துக்குட் பட்ட சில பகுதிகளிலும் உருளைக்கிழங்கு செய்கை மேற்கொள்ளப்படுகின்றன. (ஒ-14-26)

# இல்ல மெய்வன்மை போட்டி

கிளிநொச்சி - அக்கராயன் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி, இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் திருமதி.இ.ரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்கந்தா - மகாஜன

# வீரர்களின் போர் நாளை ஆரம்பம்

'வீரர்களின் போர்' என அழைக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மற்றும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் ஆட்டம் நாளை ஆரம்பமாகவுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நாளை, நாளைமறுதினம் என 2 தினங்கள் இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இவ்வருட 'வீரர்களின் போர்' ஆட்டம் 21ஆவது ஆட்டமாகும். முடிவடைந்த 20 ஆட்டங்களில் 11 ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தன. மகாஜனக் கல்லூரி அணி 5 தடவைகளும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 4 தடவைகளும் வெற்றிபெற்றுள்ளன. (அ-ம-20)

# விக்னேஸ்வரனின் கட்சிப்பெயரில் புலம்பெயர்நாடுகளில் நிதி மோசடி

யாழ்ப்பாணம், மார்ச் 2

தமிழ் மக்கள் கூட்டணியின் பெயரைப் பயன்படுத்தி புலம்பெயர் நாடுகளில் நிதி மோசடியில் ஈடுபட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகளுக்குத் துணை போகவேண்டாம் என்று கோரிக்கை விடுத்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான க.வி. விக்னேஸ்வரன்.

இது தொடர்பில் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

எனது தலைமையில் இயங்கி வரும் தமிழ் மக்கள் கூட்டணியின் பெயரில் அதன் செயலாளர் நாயகம் ஆகிய எனக்குத் தெரிவிக்காமல் எனது சம்மதத்தையும் பெறாமல், எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலைச் சாட்டாக வைத்து வெளிநாடுகளில் நிதி சேகரிப்பில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர் என்று எனக்குத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. நானோ எனது கட்சியோ, எமது கட்சி உறுப்பினர்களோ இதுபற்றி எந்தவித நிதி சேகரிப்பிலும் இறங்கும்படி எவரையும் கோரவில்லை. இவ்வாறாகப் பொய் கூறி நிதி சேகரிப்பில் ஈடுபடுபவர்களுக்கு எவரும் பங்களிப்பு எதையும் வழங்கவேண்டாம் என எனது கட்சியின் ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அரசியல் கட்சிகளின் நிதி அறிக்கைகள் வருடாவருடம் தேர்தல்கள் ஆணையாளருக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் தவறாது அனுப்பப்படவேண்டும். சென்ற ஆண்டுக்கான அறிக்கையை அனுப்புமாறு ஆணைக்குழு இப்பொழுது கோரியிருக்கின்றது. அந்த அறிக்கைகளை இப்பொழுது நாம் தயாரித்துக் கொண்டு இருக்கின்றோம். அப்படி இருக்கையில் இந்தக் கணக்கு அறிக்கைகளில் காட்டப்படாது நிதி சேகரிக்கப்பட்டு செலவழிக்கப்படாமல் இருப்பதையோ அல்லது அந்த நிதி எமது கட்சி சார்பில் செலவு செய்தமைக்கு அத்தாட்சியையோ பெற்று அது நிரூபிக்கப்பட்டால் கட்சியின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுவது மட்டுமன்றி பொய்யான கணக்கறிக்கைகளைத் தயாரித்து அனுப்பியமைக்காகக் கட்சியின் பதிவைக்கூட இரத்துச்செய்வதற்கு இடமிருக்கின்றது.

எனவே தயவுகூர்ந்து மேற்படி நிதி சேகரிப்பு நடவடிக்கைகளில் எமக்குத் தெரியாமல் ஈடுபடவேண்டாமென வெளிநாடுகளிலும் இலங்கையிலும் இருக்கும் அன்பான ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் வேண்டி நிற்கின்றேன் - என்றுள்ளது.

(அ-ம)

# 38 பவுண் நகை திருட்டு 4 சந்தேகநபர்கள் கைது!

கல்வியங்காட்டுப் பகுதியிலுள்ள வயோதிபத் தம்பதியர்வீட்டில்இடம்பெற்றதிருட்டுச்சம்பவத்துடன்தொடர்புடையகுற்றச்சாட்டில்நால்வர்கைது செய்யப்பட்டுள்ளனர்எனகோப்பாய்பொலிஸார் தெரிவித்தனர்.

வயோதிப தம்பதியர் வீட்டில் கடந்த 2ஆம் திகதி நகைகளைதிருடிச்சென்றனர். திருட்டுத்தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமையகுறித்ததிருட்டில்ஈடுபட்ட குற்றச்சாட்டில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என கோப்பாய் பொலிஸார்தெரிவித்தனர். (ச-23)

# சுற்றுலா அபிவிருத்தி கலந்துரையாடல்



யாழ்ப்பாண மாவட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல், யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

சுற்றுலாத்துறையை எவ்வாறு மேம்படுத்துவது மற்றும்அதற்காகமேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன்மாவட்டத்தில்சுற்றுலாத் துறைதொடர்பாகஏற்பட்டுள்ளபிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர்சிவபாலசுந்தரன்தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுற்றுலாத் துறை பணிப்பாளர், கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவின் மாகாணப் பணிப்பாளர் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

(ஒ-14-66)

## மைத்திரியின்...

போதியளவு புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றும் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறுத் தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர, முன்னாள் தேசிய புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நிலந்த ஜயவர்த்தன, தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சிசிர மெண்டிஸ் உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராகக் குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இவர்கள் தமது கடமைகள் மற்றும் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று தெரிவித்த உயர்நீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் 12ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபாவையும் (10 கோடி ரூபா), முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன ஆகியோர் தலா 75 மில்லியன் ரூபாவையும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 50 மில்லியன் ரூபாவையும், சிசிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாவையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடாகச் செலுத்தவேண்டும் என்றும் உத்தரவிட்டது.

இதற்கு எதிராக மைத்திரிபால சிறிசேன மேன்முறையீடு செய்தார். அவரின் மேன்முறையீட்டு மனு நேற்று நிராகரிக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் பூர்வாங்க ஆட்சேபணையை முன்வைத்ததுடன், தமது கட்சிக்காரர் தற்போது ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதால், அரசமைப்பின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத்தொடரமுடியாது என்று சுட்டிக்காட்டினர். இதையடுத்தே ரணில் விடுவிக்கப்பட்டார். (அ-ம)

## ஹெரோய்னுடன்...

ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே மேற்படி நபர் கைதுசெய்யப்பட்டார். அவரைக் கைதுசெய்யும்போது இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் அவரது சகாக்கள் இருவரும் இதன் போது கைதுசெய்யப்பட்டனர். சந்தேக நபர்கள் மூவரும் கொடிகாமம் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

(அ-ம-125,9)

## உள்ளூராட்சித்...

மானது. தேர்தல் பிற்போடப்பட்டமையானது இலங்கையர்களின் உரிமைகளை நேரடியாக மீறும் செயலாகும் என்று தனது ருவிற்றரில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த தேர்தலை, நிதிப்பற்றாக் குறையைக் காரணம்காட்டி தேர்தல்கள் ஆணைக்குழு பிற்போட்டுள்ளது. தேர்தலுக்கான புதிய திகதி நாளை அறிவிக்கப்படும் என்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## முன்னாள்...

திருகோணமலையைச் சேர்ந்த செல்பாக்கியம் சுதாகரன் என்ற குறித்த நபர் கடந்த 2018ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்ற நிலையில், இந்தியாவின் திருச்சி சிறப்பு முகாமில் கடந்த இரண்டரை வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவருடைய வழக்கு விசாரணைகள் முடிவுற்று கடந்த 25ஆம் திகதி இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். இதன்போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குறித்தநபர், நான்காம் மாடிக்கு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டபோதிலும் இதுவரை அவருடைய உறவினர்களுக்கு மேலதிக தகவல்கள் எதுவும் பயங்கரவாதத் தடுப்பு பிரிவால் வழங்கப்படவில்லை.

(அ-ம-7)

## இ.போ.ச...

முறையில் கடத்திச் செல்லப்பட்ட 4 கிலோ கஞ்சா பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டிப் பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டது.

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பேருந்தில் கஞ்சா கடத்தப்படுகின்றது என்று பூநகரி பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டதுடன், கடத்தலுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவர் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயனுக்குத் தெரிவித்தார். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை,...

யில் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி சுயாதீனமாகச் செயற்படக்கூடிய முழுமையான அதிகாரத்தைக் கொண்டிருப்பதை உறுதிசெய்யுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பரிந்துரைத்துள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் கடந்த பெப்ரவரி 16 முதல் 18ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்ததுடன் அதன்போது கண்டறியப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றை பரிந்துரையாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்பித்துள்ளனர். அதிலேயே இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

**அரசியல்கைதிகள் தொடர்பில் ஆத்மார்த்தமான நடவடிக்கை**

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கரிசனைக்குரிய விடயங்களில் நீண்டகாலமாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்போர் விவகாரம் உள்ளடங்குவதுடன், வடமாகாண மக்கள் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு இவ்விவகாரம் தொடர்பில் அரசாங்கம் அர்த்தபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக சில கைதிகள் தமது வழக்கு விசாரணைகள் முடிவுறுத்தப்படும்வரை சுமார் 14 வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்விவகாரம் தொடர்பில் பரிந்துரை செய்துள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பான ஆலோசனைக்குழுவானது, சந்தேகநபரொருவர் தொடர்பான வழக்கு விசாரணைகள் முடிவுறுத்தப்படாமல் அவர் 14 வருடங்கள் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதன் மூலம் அரசமைப்பின்கீழ் அவரது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதுடன் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச்சட்டத்தின் பிரகாரமும் அவரது உரிமை மீறப்படுகின்றது என்று தெரிவித்துள்ளது. எனவே, சிறைக்கைதிகளுக்குப் பொறுப்பான அமைச்சு இவ்விவகாரம் தொடர்பில் உரிய தீர்வை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். இவை தற்போது நல்லிணக்கத்துடன் தொடர்புடையதும் தீவிர கரிசனைக்குரியதுமான விடயங்களாக மாறியுள்ளன.

அதேபோன்று, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதில் சர்வதேச பொறிமுறையொன்றை ஆதரிக்கும் தரப்பினர், அரசாங்கத்தின் எத்தகைய கட்டுப்பாடுமின்றி பாதிக்கப்பட்ட தரப்பினரின் பிரதிநிதித்துவத்துடன் செயற்றிறன்மிக்க, நேர்மையான உறுப்பினர்களை உள்ளடக்கி நிறுவப்படக்கூடிய உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு என்ற உள்ளகப் பொறிமுறைக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தின் அதிகாரங்களுக்குக்கீழ் உருவாக்கப்படக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது சுயாதீனமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் இயங்குவதற்கு அவசியமான அதிகாரங்களைக் கொண்டிருக்கும் அதேவேளை, தம்மிடம் முன்வைக்கப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமையைக் கொண்டிருக்கவேண்டும்.

மேலும், உண்மையைக் கண்டறிவதற்கான ஆணைக்குழுவானது பாதிக்கப்பட்ட தரப்பினரின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான இயலுமையைக் கொண்டிருக்கவேண்டும். பாதிக்கப்பட்ட தரப்பினரின் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில், நீண்டகாலமாக நிலவும் காணிப்பிரச்சினை, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், நீண்டகாலமாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்போர் தொடர்பான விவகாரம் ஆகியவற்றுக்கு அரசாங்கம் அர்த்தமான தீர்வை வழங்கவேண்டியது இன்றியமையாததாகும்.

**நேர்மையானோருக்கே ஆ.குழுவில் நியமனம்**

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் வெவ்வேறு தரப்பினரால் பல்வேறு விதமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், அந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் செயற்றிறன் மிக்கவர்களாகவும் நேர்மையானவர்களாகவும் இருப்பதுடன் பாதிக்கப்பட்ட தரப்பின் பிரதிநிதிகளை உள்ளடக்கியிருப்பது அவசியம் என்று வலியுறுத்துகின்றோம்.

அதேபோன்று நீதியை நிலைநாட்டுவதற்கும், அமைதி மற்றும் உறுதித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் ஏதுவான வகையில் எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றி சுயாதீனமாகச் செயற்படக்கூடிய அதிகாரத்தை அந்த ஆணைக்குழு கொண்டிருக்கவேண்டும். ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் எந்தவொரு அரசியல்வாதியுடனோ அல்லது அவர்களின் குடும்பத்துடனோ தொடர்புபட்டிராதமையை உறுதிப்படுத்த வேண்டும்.

அதன்படி, உண்மையைக் கண்டறிதல், நல்லிணக்கம் மற்றும் இழப்பீடு ஆகியவற்றை உறுதிசெய்வதை முன்னிறுத்திய வெற்றிகரமான உள்ளகப் பொறிமுறையாகத் திகழ்வதற்கு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது வெளிப்படைத்தன்மை, சுயாதீனத்தன்மை, செயற்றிறனானதன்மை மற்றும் நேர்மை ஆகிய 4 முக்கியமான கூறுகளைக் கொண்டிருப்பது அவசியமாகும்.

**போதைக்கு எதிராகத் தீவிர கண்காணிப்புகள் வேண்டும்**

அடுத்ததாகப் போதைப்பொருள் கடத்தல் என்பது தீவிர கரிசனைக்குரிய விடயமாக மாறியுள்ள நிலையில், இதற்குத் தீர்வுகாண்பதற்கு நாட்டின் கரையோரப் பகுதிகளில் கடற்படையினரால் முன்னெடுக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்துமாறு அரசாங்கத்துக்குப் பரிந்துரைக்கின்றோம்.

இருப்பினும் புலனாய்வுத் தகவல்களை அடிப்படையாகக்கொண்ட அனைத்து மாகாணங்களுக்குமான பாதுகாப்புக் கொள்கையின் பிரகாரம் அந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும்.

மேலும் மன்னாரில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, இராணுவச் சோதனைச்சாவடிகளில் பொதுமக்கள் பெரும் அத்துமீறல்களுக்கு உள்ளாவதாக அறியக்கிடைத்திருக்கின்றது. எனவே மேற்குறிப்பிட்டவாறான அனைத்து மாகாணங்களுக்குமான பாதுகாப்புக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும் வரையில் சோதனைச்சாவடிகளில் முன்னெடுக்கப்படும் சோதனைகளின்போது உடன் அமுலுக்குவரும் வகையில் மாற்றுவழிகளைக் கையாளுமாறு பொலி ஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அறிவுறுத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

**வடக்கு மீனவர்களுக்கு எதற்காக ஓரவஞ்சனை?**

அதேபோன்று மன்னாரிலுள்ள மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமெனில், அவர்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான அட்டை கோரப்படுவது அடிப்படை உரிமை மீறலாகும். நாட்டின் ஏனைய பாகங்களில் அத்தகைய நடைமுறை அமுலில் இல்லாத நிலையில், அனைத்து மீனவர்களும் சட்டத்தின் முன் சமனான உரிமையைக் கொண்டிருக்கின்றனர்.

மேலும் விவசாயிகளின் காணிகள் இராணுவத்தினர், வனவளப்பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டில் இருப்பதனால் அவர்கள் வாழ்வாதார ரீதியில் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

வடக்கில் நிலவும் காணிப்பிரச்சினை எமது ஆணைக்குழுவின் முக்கியமான கரிசனைக்குரிய விடயமாக இருக்கின்ற அதேவேளை, அதனைத் தீர்ப்பதற்கு நீங்கள் (ஜனாதிபதி) நடவடிக்கை எடுத்திருப்பதனால் அதுகுறித்து நாம் எவ்வித பரிந்துரைகளையும் முன்வைக்கவில்லை - என்றுள்ளது. (அ-ம)

## யாழ்...

டதை அடுத்து அவர் பதவி இழந்தார். இதையடுத்து புதிய முதல்வர் தெரிவு இடம்பெறுமா? அல்லது சபை கலையுமா? என்ற கேள்விகள் விவாதப்பொருளாக மாறியிருந்தன. இந்த நிலையிலேயே எதிர்வரும் 10ஆம் திகதி முதல்வர் தெரிவு இடம்பெறும் என்றும் அதற்குரிய வர்த்தமானி விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரியவருகின்றது. (அ-ம)

## நீரில்...

கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-113)

## சர்வதேச...

வாயில்' எனும் தொனிப்பொருளில் 13 ஆவது தடவையாக இந்த வர்த்தகக் கண்காட்சி இடம்பெறவுள்ளது. இது தொடர்பான செய்தியாளர் சந்திப்பு யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. இதில், யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் தலைவர் குலரட்ணம் விக்னேஸ் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 13ஆவது தடவையாக இம்முறை இடம்பெறவுள்ளது. கொழும்பின் பிரபல வர்த்தக நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தியாளர்களுடன் இணைந்து இம்முறை வர்த்தகக் கண்காட்சி முன்னெடுக்கப்படவுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்திகளை தெற்கு தொழில் முயற்சியாளர்களுடன் இணைந்து சந்தைப்படுத்துவதற்கும் தொழில்நுட்ப நீதியில் தொடர்புகளை வளர்த்துக்கொள்ளவும் இந்த வர்த்தகக் கண்காட்சி உதவியாக இருக்கும்.

பல வருடகாலமாக வடக்கின் கைத்தொழில்துறை வளர்ச்சி மற்றும் சந்தை வாய்ப்பில் இருந்த பெரும் இடைவெளிகள் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் வர்த்தகக் கண்காட்சிகள் மூலம் குறைக்கப்பட்டுள்ளன. 250 கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்படவுள்ள நிலையில் கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக சுமார் 15 ஆயிரம் பேர் வந்திருக்கிறார்கள். சுமார் 45 ஆயிரம் தொடக்கம் 50 ஆயிரம் பேர் வரை பார்வையாளர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம். பாடசாலைச் சீருடையுடன் வருகைதரும் மாணவர்கள் குறித்த கண்காட்சியை இலவசமாகப் பார்வையிடமுடியும் - என்றார். (அ-ம-20,26)

## தேர்தல்...

இதன்படி எதிர்வரும் 9 மற்றும் 10ஆம் திகதிகளில் குறித்த விவாதம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. விவாதத்தின் முடிவில் வாக்கெடுப்பு நடத்துவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம், சபாநாயகர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு இருப்பதால், தேர்தலுக்கான நிதியைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தலையிடுமாறுகோரி சபாநாயகருக்கு, தேர்தல்கள் ஆணைக்குழு அனுப்பிய கடிதம் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அவ்வேளையிலேயே தேர்தல் சம்பந்தமாக விவாதிக்க இரு நாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. விவாதத்தின் முடிவில் தேர்தலை நடத்துவதற்கு நிதி வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை எதிரணியால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. (அ-ம-44)

## விபத்தில்...

கடந்த 23ஆம் திகதி மானிப்பாயிலிருந்து கைதடி நோக்கிச் சென்றவேளை காருடன் ஏற்பட்ட விபத்தில் அவர் படுகாயமடைந்தார். இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே சிகிச்சை பயனளிக்காமல் அவர் நேற்று உயிரிழந்தார். (அ-ம-26)

## தேர்தல்கள்...

குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கான விண்ணப்பங்களை அரசமைப்புப் பேரவை அண்மையில் கோரியிருந்தது. இதையடுத்தே தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கு மஹிந்த தேசப்பிரிய விண்ணப்பித்துள்ளார். (அ-ம)

## 50 ரூபாவால்...

எரிபொருள் விலைச்சூத்திரங்கள் அண்மையில் மாற்றியமைக்கப்பட்டன. மண்ணெண்ணெயின் விலை 355 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மீன்பிடி நடவடிக்கைகளுக்காகவும், விவசாய நடவடிக்கைகளுக்காகவும் மண்ணெண்ணெய் அதிகம் பயன்படுத்தப்படும் நிலையில் இந்த கண்மூடித்தனமான விலையேற்றத்துக்குக் கடும் கண்டனங்கள் எழுந்தன. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் காண்பதற்கு அரிதாக இருந்த மண்ணெண்ணெய், விலையேற்றத்தின் காரணமாக எரிபொருள் விற்பனை நிலையங்களில் தேடுவாரற்றுத் தேங்கும் நிலை ஏற்பட்டது. இந்தப் பின்னணியிலேயே மண்ணெண்ணெயின் விலை நேற்று நள்ளிரவு முதல் 50 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. (அ-ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா மருத்துவமனையில் ஒரு சில மருந்துகளுக்கே தட்டுப்பாடு

## மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

தற்போது பெரும்பாலான மருந்துகள் மத்திய மருந்தக விநியோகப் பகுதியால் அனுப்பப்படுகின்றது. ஒருசில மருந்துகளுக்கே தட்டுப்பாடான நிலை காணப்படுகின்றது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், மருத்துவமனையில் மருந்துத் தட்டுப்பாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சில சமயங்களில் மருந்துகள் எமக்குப் பிந்திய நிலையில் கிடைக்கின்றன. சில மருந்துகளை நாங்கள் நன்கொடையாளர்களிடமிருந்து பெறுகின்றோம். ஒரு சில மருந்துக்களுக்கு மட்டுமே தட்டுப்பாடு ஏற்படுகின்றது. அதனையும் வெளியில் கொள்வனவு செய்யுமாறு தெரிவித்திருக்கின்றோம் - என்றார். (ஒ-14-66)



முல்லைத்தீவு - வற்றாப்பளை நண்பர்கள் வட்டம் ஊடாக வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டம் மாணவர்களின் பாவனைக்காக கடந்த 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது. (ய-13)



அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கல்லூரியின் அதிபர் திருமதி எஸ்.ஜே.அனுரா தலைமையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கல்லூரியின் அதிபர், விருந்தினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ய-27)

## தடுப்புக்காவலில் இருந்து தப்பிச்சென்று கொலை

கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸாரின் பாதுகாப்பிலிருந்த ஒருவர் இரண்டு பிக்குகளின் உதவியுடன் தப்பிச்சென்று ஒருவரைக் கொலை செய்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த 24ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

விமான நிலைய பொலிஸ் தடுப்புக் காவல் அறையிலிருந்து சந்தேகநபரை பிக்குகளிருவரும் விடுவித்து அழைத்துச் சென்றுள்ளனர்.

போலிக் கடவுச்சீட்டு மூலம் வெளிநாடு செல்ல முயற்சித்ததாக கொலைச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு கட்டுநாயக்க விமானநிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

கொலைச் சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த பிக்குகள் இருவரும் பிக்குமாரின் சாரதியும் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் அவர்களது வாகனமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14-6)


DHL வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கும் கடிதங்கள்

3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, Jaffna.
0777 55 45 28



### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 69 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM தூரம் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
- புத்தூர்-சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில்.
- நன்னீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்யவும், வீடு கட்டவும் உகந்த காணி.
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா மட்டும்.
- 02 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 46 50 171, 076 911 9371

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு.

- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 KM தூரத்தில்.
- புத்தூர் சோமாஸ்கந்தா வித்தியாலயத்திலிருந்து 1 KM தூரம்.
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் காப்பெற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- அரச, தனியார் பேருந்துகள் செல்லும் வீதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.
- 2 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்.

தொடர்பு: 076 4350 614, 077 6385 683

(CS 23785) 1-6

### தேவை

கொங்கிறீற் மிக்சர் விலைக்கு வாங்கப்படும்.

தொடர்பு: 070 707 1799

### வீட்டுப்பணிப்பெண் தேவை

கொழும்பில் இருவர் கொண்ட வீடொன்றிற்கு வீட்டுப்பணிப்பெண் ஒருவர் தேவை. (50 வயதிற்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது).

தொடர்புகளுக்கு :077 77 01 523

### காணி விற்பனைக்கு

நுணாவில் (A9) பிரதான வீதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 2 பரப்பாகவும் பிரித்துத் தரப்படும். (தரகர் தேவையில்லை) மேலதிக விபரங்கள் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். நேரில் சந்திப்பதற்கான நேர ஒழுங்கு மட்டும் T.P தொடர்பாடல் பயன்படுத்தப்படும். உங்கள் பொன்னான நேரத்தை வீணடியாதீர்கள்.

காணி உரிமையாளர்:- 076 690 6272

(CS/23674)4,6

### மணப்பெண் தேவை

01. பருத்தித்துறை. இந்து கௌரவகுலம் (V). 1971. அனுசம். Bachelor of Electrical Engneering, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் : 7428.
02. சாவகச்சேரி - மானிப்பாய். இந்து கௌரவகுலம் (V). 1979. சதயம். Bachelor Degree in English, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் : 12030
03. யாழ்ப்பாணம். இந்து கௌரவகுலம் (V). 1982. அத்தம். Masters in Eletrical Engineering, USA Citizen, Divorce, மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் : 24750
04. வேலணை மேற்கு. இந்து கௌரவகுலம் (V). 1980. புனர்பூசம். MSC Engineering, USA Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் : 8257
05. சுண்டிக்குளி - சித்தன்கேணி. இந்து கௌரவகுலம். 1971. ரேவதி. Dip in Criminology, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. பதிவெண் : 31064
06. உடுவில். இந்து கௌரவகுலம் (V). 1964. உத்தரம். MBBS Doctor, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை .பதிவெண் : 29349
07. கோண்டாவில். இந்து கௌரவகுலம் (V). 1979. அவிட்டம். MSc, Canada Citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை .பதிவெண் : 27123

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728

(CS 23776)(3/6)

### மாப்பிள்ளை தேவை

01. அனலைதீவு - வேலணை. இந்து. கௌரவகுலம் (V). 1990. மகம். Bachelor of optometry, Australia Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் -32633.
02. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1991. உத்தரம். Gradute, (Family Law, Lawyer, Australia Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32297.
03. உரும்பிராய் - மாவிட்டபுரம். இந்து. கௌரவகுலம் (V). 1991. புனர்பூசம். MBBS Doctor, Australia வில் வேலை செய்து கொண்டிருக்கும் USA Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32050.
04. புங்குடுதீவு. இந்து. கௌரவகுலம் (V). 1992. உத்திரட்டாதி. ACCA Complited Accountant, Canada, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
05. தெல்லிப்பளை - கோண்டாவில். இந்து. கௌரவகுலம் (V).1993. அச்சுவினி. BSc Nursing Jaffna University, Canada Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
06. பருத்தித்துறை - சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம் (V). 1986, திருவாதிரை. MSc in IT and Charted Financial Analyst, Canada Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண் - 32904.
07. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1995. அத்தம், BSc, Post Graduate Dip Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
08. அல்வாய். இந்து. கௌரவகுலம் (V). 1987. பரணி. BSc (Hons) Chemical Engineering Technology, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
09. கந்தர்மடம். இந்து. கௌரவகுலம் (V). 1990. அச்சுவினி. BBA, Accountant, Canada Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண்- 31884.
10. உடுப்பிட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1995. அவிட்டம். Masters of Bio Medical (UK), UK Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
11. காரைநகர் - பருத்தித்துறை. இந்து. கௌரவகுலம் (V). 1995. பூரம். BSc in Accounting and Finance, UK Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
12. உடுவில் - இளவாலை. இந்து. கௌரவகுலம் (V). 1990. மிருகசீரிடம். MBBS Doctor, UK Citizen, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. பதிவெண்- 32235.

(CS 23777)

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.